உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா னொரும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்'

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"—தமிழ் மறை

தொகுதி 3. } அகஉய-ஹூ மாசி-மூ
1927-ஹூ பிப்ரவரி-மூ { பகுதி 2.

எங்கள் நாடு.

சாவித்ரி, சீதை, தமயந்தி, சந்த்ர மதி, ஆதி யைப்பெண் மணிகள்
மேவித் தெரிக்க மேலாய கற்பின் மேன்மை மிகுந்த நாடே,
தாவித் திரிந்து மரைஆன் இனங்கள் தங்கிச் செழிக்கும் நாடே
கூவிக் களித்து மயிலோடு கிள்ளை குயில்பாடும் எங்கள் நாடே. (5)
மனுவோடு ராமன், அறன்மைந்தன் மேலும் மன்பொன்னி கன்னி நாடர்
தனுவே றுயர்ந்த நற்சென்னி ஆதி தார்வேந்தர் தாங்கு நாடே
மனமா சறுத்த தவயோக ஞான மதியோர்கள் வாழ்ந்த நாடே
தனமே மிகுந்து கலையே வளர்ந்து தாலம் புகழ்ந்த நாடே. (6)
நக்கீரன் வள்ளு வன்கம்பன் ஔவை ஆழ்வார்கள் நாயன் மார்கள்
மிக்கோது காளி தாசன் வியாதன் மேலோர்கள் எங்கள் நாடே.
தக்கோர் விரும்பும் நற்சாத்தி ரங்கள் சாகுந்த லம்சி லம்பே
தொக்கார்ந்த நூல்கள் ஒல்காதொளிர்ந்த தொன்னாடும் எங்கள் நாடே. (7)
நதிமீ துமுன்வ டெதிரேறிவந்த நன்னாடு மெங்கள் நாடே.
பதிமீ துவந்த கடல்வற்ற நின்று பணிவித்த தெங்கள் நாடே.
விதிமீ திறந்த இளையாரை மீட்டு வீறுற்ற தெங்கள் நாடே.
அதிமீ தமர்ந்த பெம்மான் வரங்கள் தோய்ந்திட்ட தெங்கள் நாடே. (8)

நா. லக்ஷ்மிநரஸிம்மையர், தமிழ்ப்பண்டிதர், வத்திராயிருப்பு.

மருவி வழங்கும் சில சொற்கள்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவகை நீர்நிலையைக் 'கம்மாய்' என்றும், 'கண்மாய்' என்றும் சொல்லுகிறார்கள். இவ்விரு சொற்களுக்கும் பொருள் இல்லை. திருத்தமான மொழி 'கம்வாய்' என்பதே. அதற்கு 'நீர் தங்கும் இடம்' என்பது பொருள். [கம்—நீர். வாய்—வாயில்: இடம்]

'நீர்' என்று சொல்வதற்குப் பதிலாகத் 'தண்,' 'தண்ணு' 'தண்ணி' என்று பலர் சொல்லுகிறார்கள். அவர்கள் நினைத்த மொழி 'தண்ணீர்' என்பதே. 'தண்' என்பதற்குக் 'குளிர்ந்த' 'குளிர்ச்சி' என்பன பொருள். 'தண்ணு' என்பதற்குப் பொருளே இல்லை. 'தண்ணீர்' என்பதற்கோ 'குளிர்ந்த நீர்' என்பது பொருள். ஆயினும், இம்மொழியை உபயோகிப்பதிலும் ஒரு பெருந்தவறு செய்கிறார்கள். 'தண்ணீர்'க்குரிய முற்கூறிய பொருளை மறந்து, 'தண்ணீர்' என்பது, கேவலம் 'நீர்' என்பதையே குறிப்பதாக நினைத்து, 'குளிர்ந்த நீரை'ப் 'பச்சைத்தண்(ணீர்) என்றும், 'உஷ்ண நீரை'ச் 'சுடுதண்(ணீர)' என்றும், கூறிவருகிறார்கள். அவற்றை முறையே, 'தண்ணீர்' என்றும் 'வெந்நீர்' என்றுமே சொல்லல்வேண்டும். 'சுடு' என்பதன் பின்னுள்ள 'தண்' என்பதை நீக்கல் வேண்டும்.

சைவர் நெற்றியில் அணியும் திருநீற்றை, 'வெவ்விதி' என்றும், 'துண்ணூறு' என்றும் பாமரஜனம் கூறும். முன்னைய இருமொழிகளும் 'விபூதி' என்றும், பின்னது 'திருநீறு' என்றும் இருத்தல்வேண்டும். 'விபூதி' என்பதற்கு, 'விசேஷ செல்வம்', 'கொடுமையை நீக்குவது', 'விசேஷ தத்துவம்', 'நரகம் நீக்குவது', 'பிறப்பு அழிப்பது' முதலியன பொருள்கள். 'திருநீறு' என்பது 'பரிசுத்தமான பசுவின் சாணத்தைச் சாஸ்திர விதிக்கிணங்க நீற்றிய தூள்' என்றும், 'பாவங்களைச் சுட்டுச் சாம்பராக்கவல்லது' என்றும் பொருள்படும்.

'துண்ணூத்திப்பச்சை' என்பதையும் இவ்வாறே 'திருநீற்றுப் பச்சை'யெனத் திருத்திக்கொள்க.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்

தமிழ் இலக்கியம்.

(34-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

முற்காலத்துப் புலவர்கள் செய்தருளிய நூல்கள் பலவற்றி னுள்ளும் இறந்தனபோக இப்போதுள்ளன சிலவே. அகத்திய முனிவர் தமிழிலக்கணம் செய்யுமுன்னரே 'குமரம்' எனப் பெயரிய ஒரு நூல் குமரக்கடவுளால் செய்யப்பட்டு நிலவியது எனவும், ஆன் றோர் கூறுப. குமரக்கடவுளைத் 'தமிழ்த் தெய்வம்' எனச் சிறப் பித்துக் கூறுதலுக்கு இதுவுமோர் காரணமாம் போலும். ஆயினும் அந்நூல் தற்போது மறைந்தது. நன்னூலிற்கு ஏனை மூன்றதிகார மும் உளவெனவும், அவை பின்னர் மறைந்தன வெனவும் சிலர் கூறுப. இங்ஙனம் மறைந்துள்ளன பலவுள. மறையாது ஒழிந் திருப்பன சிலவுள. அவை தமிழ் மணம் அறியாதாருட் சிக்குண்டு அவர்க்கும் பிறக்கும் பயன்படாது கிடக்கும் சில ஏட்டுச்சுவடிகளே யாம். இவற்றையேனும் அவர்கள் உலகிற் குதவிடின், தமிழின் மேன்மை மேன்மேனும் விளங்கும். தற்போது நிலவுவனவாகிய இலக்கிய நூல்களினுட் பலவும் தமிழின்கண் தேர்ச்சியடையா தார்க்கு எவ்வகையானும் விளங்கா. அவற்றின்கண் போந்த நுண்ணிய கருத்துக்களை மொழிவன்மை யில்லார்க்கு உலகவழக் கிற் கூறினும் அவர்கள் உணரார். இலக்கியத் துறையில் நுழை யாது தமது மனத்தை வன்மைப்படுத்தியவர்கட்கு அவை விளங்கா மற் போவது ஓர் வியப்பன்று. ஆயினும், அவர்களும் அவற்றை எளிதின் அறிந்துகொள்ளுமாறு செய்தல் அறிஞர்க்கு மாறுக்கட னாகும். ஆதலின், அவர்க்கு ஆண்டாண்டுப் போந்த நுண்ணிய கருத்துக்களை மிகுமுயற்சி யெடுத்தேனும் இனிதின் விளங்குமாறு கற்பித்தல் இன்றியமையாதது. அன்றியும், 'பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகவினிதே' என்றும்; 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினுங் கற்கை நன்றே' என்றும்; 'கற்க கசடற' என்றும்; ஆன்றோராற் கூறப்பட்ட இனிய தொடர்களைச் செல்வப் பொருள் செறிந்த வறியாரும் பிறரும் நன்குணர்ந்து தொல்லிலக்கிய நூல் களைக் கற்கத் தொடங்குவரேல், அது, தமிழ் மொழிக்குச் செய்த இன்றியமையா உதவியாக ஆன்றோராற் கொள்ளப்படும். அறியா மையும் நீங்கும்.

பழைய இலக்கிய நூல்கள் அனைத்தும் எளிதிற் பொருளுணருந் தன்மையிலவா யிருத்தலின், அறிவிற்சிறந்த பெரியோர் அவற்றிற்கு உரையெழுதுவா ராயினர். அவ்வுரையும், பின்னையோர்க்கு நன்கு விளங்கிற் றிலதாதலின், அறிவுடையோர் அவற்றையும் பலவேறு வகைப்பட்ட நூல்களாக எளிய நடையில் ஆக்கினர். அவற்றையுங் கற்றற்கு அரியவென இக்காலத்தார் நீக்கிடின், பின்னர், தமிழ் மொழியின் நிலைமை எவ்வாறாம்? ஆதலின், நமது முன்னையோர் இயற்றியருளிய இலக்கிய நூல்களை எங்ஙனமேனும் விரும்பிக் கற்றுத் தமிழ்மொழியின் பண்டைச் சிறப்பைப் புலப்படுத்துவதே தமிழருக்கு, ஒப்பற்ற கடனும். எம்மொழி வல்லாரும் தமிழ் ஆரியம் என்னும் மொழிகளினுட் காணப்படும் இலக்கியங்களைப் போன்ற சிறந்த இலக்கியங்களைச் செய்தறிந்தா ரில்லை. நீதிகளைக் கூறுந் தமிழிலக்கியங்கள் எல்லாரானும் இனிது போற்றப்படுந் தன்மையனவா யிருக்கின்றன. திருவள்ளுவர் போன்ற நீதிநூற்கள் எம்மொழிக் கண்ணுந் தோன்றிற்றில்லை என்பதற்குச் சான்று வேண்டுமோ? ஆகவே, எவ்வகையானுஞ் சிறந்த தமிழிலக்கியங் களைத் தமிழராவார் அனைவரும் நன்குபோற்றுதல் வேண்டுமென்று சொல்லாதே அமைவதாமன்றோ! ஆகலின், 'கல்வி கரையில, கற்ப வர் நாள் சில' என்பதை உணர்ந்து தமிழிலக்கியங்களைப் பல காலுங் கற்றல் வேண்டும். அவற்றை உணர்தற்கு இலக்கண நூல்கள் ஒப்பற்ற கருவியாயிருத்தலின், அவற்றையும் சோர்வின் றிக் கற்றல் இன்றியமையாததே.

ராமசுப்பிரமணிய நாவலர்,
பத்திரிகாசிரியர், 'விசாலஹிருதயம்', பத்மநாமபுரம்.

இடையெழுத் தலங்காரம்

'மாதிடத்தான்' பேர்,'இசை'ப்பேர், மாமரப்பேர், 'ஓட'ப்பேர்
ஓதிடத்தான் தோன்றும் உயர்நாடே—தீதில்
இடையெழுத்தால். இந்நாடு யாதென்றிங் கெம்மை
உடையநச்சி னார்க்கினிய! ஓது.

நா. லக்ஷ்மிநரசிம்மையர்.

காமந்தக நீதி சாரம்

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சாஸ்திர ஆராய்ச்சி, தைரியம், சாமர்த்தியம், கிரஹண சக்தி உத்ஸாகம், சொல்லும் திறமை, ஆபத்துக்களைச் சகித்தல், வீரியம் தூய்மை, நட்பு, ஈகை, மெய்ம்மை, நன்றியுணர்வு, சீலம், அடக்கம் ஆகிய குணங்கள் செல்வத்திற்குக் காரணமாயிருக்கின்றன.

மன்னவன், முதலில் தன்னையும், பிறகு மந்திரிகளையும், பின்பு வேலைக்காரர்களையும், பின்பு தன் புதல்வரையும், பின்பு பிரஜைகளையும் வினயமுள்ளவராகச் செய்தல் வேண்டும். ஏனெனில் எப்பொழுதும், தன்னிடம் அன்புள்ள குடிகளுடையவனும், பிரஜைகளைப் பரிபாலிப்பதில் கவலையுள்ளவனுமாகிய அரசன், அதிக ஸம்பத்தைப் பெறுகின்றான்.

மன்னவன், ஐம்புலன்களாகிய காட்டில் திரிந்து, தமக்குத்தாமே கேடு விளைவித்துக் கொள்ளும் இந்திரியங்களாகிய மதயானையை அறிவென்னும் அங்குசத்தினால் வசப்படுத்த வேண்டும்.

சிரமப்பட்டு, வெளி விஷயங்களிற் செல்லாவாறு ஆத்மாவைத் தடுப்பின், அது மனதோடு சேருகின்றது. ஆத்மா மனம் இவற்றின் சேர்க்கையால் காரியங்களிற் பிரவேசமுண்டாகின்றது. மனம், இந்திரிய சுகமாகிற மாம்சத்துண்டாகும் ஆசையினால், கண் முதலிய புலன்களை ஏவுகின்றது. மனிதன் சிரமப்பட்டாவது அம் மனதை அடக்கவேண்டும். மனதை யடக்கிவிட்டால், அவன் ஜிதேந்திரியனாகின்றான். விஞ்ஞானம், இருதயம், சித்தம், புத்தி, மனம் இவை யாவும் ஒன்றே. ஆத்மா, இவ்வுலகில் மனதால் பிரவர்த்தி நிவர்த்திகளையும், தர்மாதர்மங்களையும், சுக துக்கங்களையும், இச்சாத் துவேஷங்களையும் அடைகின்றது. முயற்சி அறிவு, ஸம்ஸ்காரம் இவைகள் ஆத்மாவிற்கு லக்ஷணமாகும். மனம் பல்வேறு விஷயங்களில் சென்று உழல்வது ஸங்கல்பம் ஆம்.

செவி, கண், நாசி, நாவு, உடல், வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம் இவைகள் இந்திரியங்களாம். சப்தம், ரூபம், கந்தம், இரசம், ஸ்பரிசம், பேசுதல், வாங்குதல், போதல், மலங்கழித்தல் ஆனந்தம் இவை முறையே அவ்விந்திரியங்களின் தொழில்கள்.

புத்தி, மனம், இவை 'அந்தக்கரணம்' என்று சொல்லப்படு கின்றன. முயற்சியோடு கூடிய புத்தி மனம் இவற்றால், பிரவர்த்தி யுண்டாகிறது. புற இந்திரியங்களும் அவற்றின் விஷயங்களும், 'பகிஷ்கரணம்' என்று கூறப்படும் ஆத்மா சங்கல்பம் பிரயத் தனம் இவற்றால் சுகம் அடைகிறது.

அந்தக் கரணம் பகிஷ்கரணம் ஆகிய இரண்டும் பிரயத்தனமேற் பட்டபின் பிரவேசிக்கின்றன. ஆதலின் பிரயத்தனத்தை நீக்கிவிட் டால் ஒழிவு ஏற்படும். தர்மாதர்மங்களை யுணர்ந்த கொற்றவன், இவ் வாறு கரணபலத்தினாலும், புத்தியினாலும், தன்னை யடக்கிக்கொ ண்டு, தனக்கு நன்மை தரக்கூடிய காரியங்களைச் செய்யவேண்டும். ஏனெனில், ஒன்றான மனதை வெல்லுந் திறமையற்றவன், நான்கு கடல்களாலும் சூழப்பட்ட பூமியை வசப்படுத்த முடியாதன்றோ?

முடிவில் ஸாரமற்றவைகளும் இனிமையுள்ளனபோல் தோன்று கின்றவைகளுமான சப்தம் முதலிய விஷயங்களில் பற்றிய மன முள்ள மன்னவன், வேழத்னைதப் போல் பிறர் வசப்படுவான். ஓசை முதலிய விஷயங்களால் அறிவிழந்து தகாதகாரியங்களைச் செய்யும் அரசன், மிக்க பயத்தையே கொடுக்கும் ஆபத்தைத் தானாகவே சம்பாதித்துக் கொள்ளுகின்றான்.

(இன்னும் வரும்)

பண்டிதர்: M. M. நாராயணசாமி ஐயர்,
முடிகொண்டான்.

விடுகதை வினா.

நற்றமிழீர்! நாலெழுத்தில் 'ஓர்மன் னன்பேர்':
நண்ணுமிதின் ஒன்றிரண்(டு) "அக் குலநல் லோன்" ஆம்.
மற்றுமுள இரண்டெழுத்தும் 'நகரம்' ஆகும்.
வாய்ந்தமுத லொடுநான்கோர் 'வனிதை' ஆகும்.
முற்றவிரண் டொடுநான்கும் 'பாய்' என் றாகும்.
மூன்றிரண்டும் ஆய்ந்துணரின் 'பிரி' என் றாகும்.
கற்றவர்கள் கொண்டாடும் கனமிக் கார்ந்த
கவின்நச்சி னார்க்கினிய! கழ(று) ஈதென்னே?

G. அழகர்ராஜு, II-வகுப்பு, நாஷனல் கல்லூரி, திருச்சி.

மாண்டவன் மீண்ட மாயம்.

இருபத்துநான்காவது அத்தியாயம்.

ராமஸ்வாமியும் பலராமனும்.
Ramasamy & Balaraman

"ராமஸ்வாமி இடத்தில் நாம் கொடைக்கானலுக்குப் போவ தாய்ச் சொல்லிவிட்டு, அப்படிச் செய்யாமல், மங்களபுரத்தில் சம்புவைப் பார்க்கச் சென்ற விஷயம், எப்படியாவது அவனுக்கும் பகைவருக்கும் தெரிந்துவிடும். அதனால் அவர்கள் மனதில் சந்தேகத்திற்கு இடம் உண்டாகும்" என்று ஆலோசித்துச் சிதம்பரம், பின்வருமாறு ராமஸ்வாமிக்கு ஒரு கடிதம் எழுதலானார்.

"அன்புள்ள ராமஸ்வாமிக்கு,

"நான் உன்னிடம் சொன்னபடி கொடைக்கானலுக்குப் போகமுடியவில்லை. மங்களபுரத்தில் என் கட்சிக்காரன் சுப்புவிடம் ஒரு அவசரமான விஷயம் கலந்துகொண்டுபோக வந்திருந்தேன். நேரமாய்விட்டதால் உன்னைப் பார்க்கமுடியவில்லை. மறுபடியும் வருவேன். உன்னைப் பார்க்கிறேன். உன் கேஸ் எந்த நிலைமையில் இருக்கிறது என்று எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். ஆனால் இவ்வளவு காலத்திற்குப் பிறகு, மங்களபுரத்தில் உனக்கு யார் என்ன சொல்லப்போகிறார் என்றுமாத்திரம் கவலைப்படுகிறேன்."

உன் அன்புள்ள

சிதம்பரம், மதுரை."

கைலா:—"(சிரித்துக்கொண்டு), நாம் அவர் தலைக்குக் கல் பிடித்துவிட்டோம் என்பது அவர் மனதில் நன்றாய்ப் பதிந்து விட்டது."

ராம:—'சங்கரியை ஒன்றும் வெளியிடாமல் இருக்கும்படி சொல்லத்தான் சிதம்பரம் இவ்விடம் வந்தார் என்று நினைக்கிறாயா?"

கைலா:—"ஆமாம்! தடையென்ன? சம்புவையும் தமக்குத் தெரியும் என்றும், அந்தப் பக்கத்தில் நம் விசாரணை எல்லாம் பயன்படாமல் தம்மால் செய்யமுடியும் என்றும் நமக்குத் தெரிவிக்கவேண்டுமாம். நம்மைப் பயமுறுத்துகிறாராம். அதற்காக

இந்தக் கடிதம் எழுதி இருக்கிறார். இருக்கட்டும். பனங்காட்டு நரி கிலுகிலுப்புக்கு அஞ்சுமா ?"

ராம:—"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. சம்புவை நேற்றுப் பார்க்கப்போனபோது அவர் 'வரக்கூடாது' என்று விட்டாரே!"

கைலா:—"அதனால் ஒன்றும் நிச்சயிக்க முடியாது. அது அவர் ஸ்வாபம். கிராம முன்சீபும் அப்படித்தான் சொல்லுகிறார். சம்பு ஒருவரையுமே பார்ப்பது கிடையாதாம்."

ராம:—"அப்படி ஒளிந்திருக்கக் காரணம் என்ன?"

கைலா:—"எப்படிச் சொல்லமுடியும்? ஒருவேளை உண்மையில் நீ சந்தேகிக்கிறபடி, அவரே தர்மராஜுவாக இருக்கலாமோ என்னவோ ?"

ராம:—"எனக்கு நிச்சயமாய் அப்படித்தான் தோன்றுகிறது: அந்த மடத்திற்குள், அந்தக்கொலைக் கேஸைச் சேர்ந்த பத்திரிகைகள் அகப்பட்டதேன்? சம்பு தர்மராஜுவாய் இரா விட்டால் சங்கரனுக்கு என்ன வேலை அங்கே ?"

கைலா:—"சம்பு தர்மராஜுவானால்,—சங்கரன் அவனிடத்தில் வேலைக்கிருப்பதென்றால்,—இந்தக் கொலையில் இரண்டு பெயர்களும் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும்."

ராம:—"எப்படிப் பார்த்தாலும் திகைப்பாய் இருக்கிறதே !"

கைலா:—இந்தப் பலராமனை—அதாவது சங்கரனை— விசாரித்தால் எல்லாம் தெரிந்துவிடும்."

ராம:—"அவனா ?—ஒன்றும் சொல்லப்போகிறதில்லை."

கைலா:—"எல்லாம் சொல்லுவான். நீ போய், அவனுடைய பழைய எஜமானனுடைய புத்திரன் என்று சொந்தம்பாராட்டிக் கேள். நானும் போய்வருகிறேன்."

ராம:—"நீ எங்கே போகிறாய் ?"

கைலா:—"பத்மவிலாசத்திற்கு அரைமைல்தூரம் இருக்கிறது. அதுதான் பழைய மங்களபுரம். ஒருதரம் வைகையில் அதிக வெள்ளம் வந்து, அங்கே இருந்த வீடுவாசல்களை எல்லாம் அடித்

துக் கொண்டுபோயிற்றும். இந்த இடம் பிறகு மேடாகவே, அதில் ஊர் உண்டாயிருக்கிறது."

ராம:—"அங்கே போய்?—"

கைலா:—"யாராவது கிழவர்கள் இருப்பார்கள். அவர்களை ஏதாவது விசாரிக்கலாம் என்றுதான்."

இதற்குள் கிராம முனிசிபும் வந்து சேர்ந்தார். ஒருவருக்கொருவர் உபசாரங்கள் சொல்லிக்கொண்ட பிறகு, அந்தப் பிரதேசத்தின் அழகான அமைப்பையும், பெரியாற்றுக்கால் வந்தபிறகு பூமியின் செழிப்பையும், சற்றுப் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள்.

கைலா:—"கிராம முன்சிப் அவர்களே! உங்கள் பிள்ளை எழுதிய நாவல்—"

கிராம:—"ஹ ஹ ஹா! ஹ ஹ ஹா!! நன்றாய்த்தான் இருக்கிறது. அப்படித்தான் சொல்லுகிறார்கள். எனக்கு இந்தப் பொய்க்கதை எல்லாம் பிடியாது. ராமாயணம், பாரதம், எத்தனை இருக்கின்றன! இதெல்லாம் விட்டுவிட்டுச் சின்னப்பயல்—."

கைலா:—"காலத்துக்குத் தக்க கோலம்! அந்தப் புஸ்தகம் எழுதினதில் நல்ல காசாமே?"

கிராம:—"ஹ ஹ ஹா. ஆமாம்! ஆமாம்!; அதிலே இன்னொரு ஆச்சரியம்; சம்புகூட அதை வாங்கிப் படித்தார்—அவர் இந்த உலகப் பற்றே இல்லாதவர். அவர்கூட—"

கைலாஸமும், ராமஸ்வாமியும் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்த்தார்கள். இதைக் கிராம முன்சிப் கவனிக்கவில்லை.

கைலா:—(கபடமாய்) "ஆமாம் வாசிக்கவேண்டும் என்ற ஆத்திரம் இருக்குமல்லவா?"

யாதொரு கபடமும் அறியாத பழையகாலத்து மனிதரானதால் கிராம முன்சிப், "ஹ ஹ ஹா! அதுவும் வாஸ்தவந்தான் என்று மறுபடியும் சிரித்துவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

கைலா:—"தர்மராஜு—தான் சம்பு என்று கடைசியாய்த் தீர்மானித்து விட்டாய்?"

ராம:—(யோசித்து), "இல்லை! இல்லை!! இன்னொரு சந்தேக மல்லவா: சம்பு தர்மராஜனாய் இருந்தால், சங்கரன் அவனிடத்தில் வேலைக்கிருக்க மாட்டானே?"

கைலா:—"சிதம்பரம் வந்துவிட்டுப் போனதைப் பார்த்தால் சம்புவுக்கும் அந்தக் கொலையில் சம்பந்தமிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. சம்புதான் தர்மராஜன் என்பதற்கு, சங்கரன் அங்கே வேலையாய் இருப்பது சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது. எல்லாவற்றிற்கும், நான் பத்மவிலாஸம் சென்று வருகிறேன்."

ராம:—"நான் என்ன செய்யவேண்டியது?"

கைலா:—"நீ பலராமனைப் பார்த்து விசாரித்து வா"

ராம:—"அவனால் ஏதாவது சொல்லமுடியும் என்று நினைக்கிறாயா?"

கைலா:—"முடியும். அன்றிரவு உன் தாயாரும் தர்மராஜனும் திரும்பி வரும்பொழுது அவன் வீட்டில் இருந்திருக்கிறான். டப்பி ஸமாசாரம் முழுமையும் அவனுக்குத் தெரியும். அது யாருடைய டப்பி என்று அவன் சொல்லக் கூடும்—."

ராம:—"அப்படியானால் அவன் ஏன் அதை வெளிப்படுத்தி இருக்கக்கூடாது?"

கைலா:—"பார்த்தாயா? மறுபடியும் என்னைக் கேட்கிறாயே? அதன் காரணம் அவன் தான் சொல்லமுடியும். எல்லா விஷயத்திற்கும் நான் 'பத்மவிலாசம்' போய் வருகிறேன். நீ பலராமனைப் பார்த்துவா. பின்பு சாவகாசமாய் யோசித்துக்கொள்வோம்"

இவ்வாறு சொல்லி விடைபெற்றுச் சென்றான் கைலாஸம். ராமஸ்வாமியும், கால்வாய் ஓரமாகவே, மடத்தை நோக்கி வந்தான். அம்மடத்தைச் சேர்ந்த தோப்பில், பலராமன் நின்றுகொண்டு, மரங்களை, ஒவ்வொன்றாய்ப் பரிசோதித்துக் கொண்டிருந்தான். ராமஸ்வாமி தோப்புக்குள் நுழைந்ததைக் கண்ட பலராமன், சற்றுத் திடுக்கிட்டான். ஆகிலும், அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல், "என்ன! நாம் எழுதிய கடிதம் பயனில்லையே!" என்று யோசித்துக் கொண்டு, அவனைப் பாராதவன்போல் தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தான். பலராமன் முதல்முதல் பேசுவான்

என்று ராமஸ்வாமி எண்ணியிருந்தான். ஆயினும் அவன் பேசாததால், அவன், தானே பேசத்தொடங்கினன்.

ராம:—"இதென்ன ஜாதி மரம்! என்ன பாக்கிறுய்?"

பல:—"என்னையா கேக்குறீங்க?. ஏதையா என்மேல் இவ்வளவு தயவு?"

ராம:—"கேட்கப்படாதா?"

பல:—"அதிருக்கட்டும். நீங்கள் இங்கு வந்த விசேஷம் என்ன?"

ராம:—"உன்னைச் சிலசமாசாரம் கேட்கவேண்டியிருக்கிறது. நான் யார் தெரியுமல்லவா?"

பல:—"தெரியும். வக்கில் கைலாஸத்தோடு வந்திருக்கிறீங்க!"

ராம:—"என் பெயர் தெரியுமா?"

பல:—"சனியன் பிடிச்ச முசல்கள் இந்த மரத்தில் சுத்திக்கிட்டு—"

ராம:—"பலராம்! நீ சாமர்த்தியசாலிதான். ஆனல்—"

பல:—"என் பெயர் உமக்கு எப்படி தெரியுமையா?"

ராம—"தெரியாமல் என்ன?"

பல:—"என்ன ஐயா! என்னை உமக்கு முன்பின் தெரியாது-"

ராம:—"இப்போ என்னை மறந்து விட்டாய். இருபது வருஷமாயிற்றல்லவா என்னைப் பார்த்து—?"

பல:—"ஏனையா பொய் சொல்லுகிறீர்?"

ராம:—"பொய்யே இல்லை. நீ யார் சொல்லட்டுமா?"

பல:—"'பலராமன்' இன்னுதான் சொன்னீங்களே."

ராம:—"இப்போழுது 'பலராமன்' தான்—ஆனல் இருபது வருஷத்துக்கு முன்—பத்ம விலாசத்தில்–இருக்கும்பொழுது-?"

பலராமன் மனம் துடித்தது. அவன் முகம் வெளுத்தது.

ராம:—(சற்றுத் தாமதித்துவிட்டு மறுபடியும்) "இருபது வருஷத்திற்கு முன் உன் பெயா சங்கரன் அல்லவா?"

பல:—(தைரியம் கொண்டு,) "பத்மாவையும் நான் காணேன்; விலாசத்தையும் காணேன். என்ன சொப்பனமா உங்களுக்கு?"

ராம:—(தீனமான குரலுடன்) "சங்கரா! இதென்ன பேச்சு! என்னை மறந்துவிட்டாய்! என்னை முடியிலும், மார்பிலும், வைத்து வளர்க்கவில்லையா நீ? நான் உன் எஜமானன் சோமுவின் பிள்ளை இல்லையா? நீ மறந்துவிட்டாலும், நான் உன்னை மறப்பேனு?"

சங்கரன் ஒன்றும் சொல்லாமல் சற்று மௌனமாய் இருந்தான்.

ராம:—(மறுபடியும்) "சங்கரா! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வந்தேன். வக்கீல் சிதம்பரம்—"

பல:—"அந்தப்பயல் வார்த்தையை எடாதேயுங்க."

ராம:—"சிதம்பரம் பேச்சைக்கேட்டு என்னேடு பேச மாட்டேன் என்கிறுயே! நான் உன் எஜமானன் பிள்ளை இல்லையா? என் தகப்பனுரைக் கொன்றவனை உன்மூலமாய் அறிந்து, அவனுக்குத் தக்க ஏற்பாடு செய்ய விரும்புகிறேன்."

பலராமன் உக்ரமாய் ராமஸ்வாமியைப் பார்த்தான். ஆனல் பலராமன் கோபிப்பதுபோல் பாவனை செய்கிருன் என்றும், அவன் மனதில் வேறு ஏதோ வேதனை செய்கிறதென்றும் ராமஸ்வாமி அறிந்தான்.

பல:—"என்ன? உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கச் சொல்லுகிறீங்களா? என்னல் ஒண்ணும் சொல்லமுடியாது."

ராம:—"சங்கரா!"

பல:—"நான் சங்கரன் இல்லே, பலராமன். எனக்கொண்ணும் தெரியாது. நான் சிவனே என்று கிடக்கேன். வேலேமெனக்கிட்டு இரண்டு பேர்களும் அலேகிறீங்களோ? போ, போ!" என்று சொல்லிவிட்டுத் திடீரெனப் போய்விட்டான்.

தான் எதிர் பார்த்தபடி, பலராமனிடம் ஒன்றும் அறியக் கூடாமையைப்பற்றி ராமஸ்வாமி வருத்தம் அடைந்தான். "ஏதோ இருக்கட்டும். சிதம்பரத்தின்மேல் அவனுக்கு வெறுப்புத்தான் நம்மேல் கொஞ்சம் பிரியம்தான். இவன் சங்கரன்தான் என்றும் தெரிகிறது. ஆனல் சம்பு என்பவர் யார்? அதுதானே தெரியவில்லே." என்று ஆலோசித்துக்கொண்டு கைலாஸத்தின் ஜாகைக்குத் திரும்பினுன் ராமஸ்வாமி.

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

கிறுக்கு முத்தன்.
(Mutthan The Lunatic.)

நான்கு ரஸ்தாக்களும் சந்திக்கும் இடத்தில் ஒரு பெரிய ஆல மரத்தடியில் சுமார் 50-வயதுள்ள கிழவி ஒருத்தி, வெள்ளிரிப்பிஞ்சு களும், பலகாரங்களும் வைத்து விற்றுக்கொண்டிருந்தாள். பக்கத் தில் ஒரு சிறு அடுப்பில் பலகாரங்கள் வெந்துகொண் டிருந்தன. இவள் இருந்த இடத்திற்குச் சமீபத்தில் ஓர் ரமணியமான தோப் பும், தோப்புக்குச் சற்றுத் தூரத்தில் சில பாழடைந்த வீடுகளும் இருந்தன.

பகல் சுமார் 11மணி இருக்கும். சித்திரைமாத வெயில். அரைக்கைச் சட்டை தரித்து, தலையில் 'கிருதா'க் கட்டுக் கட்டிக் கொண்டு, நமது கைலாஸம், ஒரு சாதாரண நாட்டுப்புறத்து வழிப் போக்கன்போல் அவ்விடம் வந்து, "அப்பாடா! என்ன வெயில்!" என்று களைப்புடன் கிழவிபண்டை உட்கார்ந்து வெள்ளரிப்பிஞ்சில் இரண்டை வாங்கித் தட்டித்தின்ன ஆரம்பித்தான்.

கைலா:—"என் கிழவி! இதென்ன, ஊர் இப்படியிருக்கிறது?"

கிழவி:—"என் சொல்றே அப்பா! நாசமாப்போன வெள்ளம் அடிச்சிகிட்டுப் போச்சு, 15, 16 வருசத்துக்கு முன்னே."

கைலா:—"அப்போ நீ ரொம்பக்காலமாய் இந்த ஊர்தானே?"

கிழவி:—"எனக்கு 50 வருசமாய் இந்த ஊர்தான்—?"

கைலா:—"இதோ பக்கத்தில் தோப்பும், பங்களாவும் தெரி கிறதே, அது யாருடையது?"

கிழவி:—"ஐயோ! அந்தக் கொடுமையை ஏன் கேக்கிறாய்? 20 வருஷத்துக்கு முன் சோமு வென்னு ஒருத்தர் இருந்தார். அவ ரைக் கொண்டுபோட்டுட்டு—ஹ்ம்—எல்லாம் தொலைஞ்சிச்சு. அதன் கிட்டவே ஓர்த்தரும் போறது கிடையாது. பாதிராத்திரியில் ஓர்த்தரும் இந்த வளி வாரது கூட கிடையாது 'ஐயோ! ஐயோ ஐயோ!' எண்டு சத்தம் போடுரூரு சோமு எசமான், நடுநிசியில்"

கைலா:—"கொலையா? அதென்ன? 20 வருஷத்துக்குமுன்னு நடந்தது?"

கிழவி:—"ஆமா சாமி! ஆமா.—சோமு எசமான்—ரொம்ப நல்லவங்க. செத்துப்போனாரு. கொன்னது அவர் பொஞ்சாதி இன்னுங்க. பாவம்! அதெல்லாம் போய். தர்மராஜு இங்கரதும் பொய்"

கைலா:—"ஏன் கிழவி தர்மராஜு யார்? அவரைத் தெரியுமா உனக்கு?"

கிழவி:—"நல்லாத் தெரியும் சாமி! அவர் இல்லே சாமி. இந்த எரிஞ்சுபோகிறவனுக்குத்தான் நெசம் தெரியும். எந்தப் பாவிப்பயலோ செய்திட்டுப்போகப்—பண்டம் ஒரு திக்கும், பழி பத்து இடமும் ஆச்சு."

கிழவி சொன்னது, தான், அடிக்கடி, இனி கண்டபேர் மேலெல்லாம் சந்தேகங்கோள்வது தகாதென்று, தனக்கும் புத்தி சொல்லியதுபோல் கைலாஸத்துக்குத் தோன்றிற்று.

கைலா:—(கொஞ்சம் சிரிப்புடன்) "ஏன் கிழவி! பின்னே யார் தான் கொலே செய்திருப்பார்?"

கிழவி:—"எல்லாம் அடுத்துக் குடியைக் கெடுப்பான் அந்தச் சங்கரன்தான். வேலேக்காரச் சங்கரனுத்தான் இருக்கணும்."

இந்த நிலேயில் கிழவிக்குக் கைலாஸம் கேட்கும் மாதிரியில் சந்தேகமுண்டாய்விட்டது. உடனே திடுக்கிட்டு 'முன்பின் தெரியாதவனிடம் என்னென்னவோ உளறுகிறேனே' என்று அவள் பயந்து, "சாமி! நீங்கயாரு? போலீசுக்காரங்களா சாமி?. என்னவோ தெரியாது சாமி!. எனக்கொண்ணுந் தெரியாது சாமி. உங்களுக்குக் கும்புடுறேன் சாமி. நான் சிவனேண்டு இருக்கேன் சாமி. இந்தக் காய்க்கு வேணுமானுலும் துட்டுவேண்டாம் சாமி. எல்லாம் இந்தத் தோட்டக்காரன் கிறுக்கு முத்தன் தான் சொன்னுன் சாமி" என்று பரிதபித்துரைத்தாள்.

கைலாசம் இனிமே லிவளிடம் ஒன்றுமறிய முடியாதென்று நினேத்து ஒரு அணுக்காசைக் கிழவியிடம் எறிந்துவிட்டு 'என்ன ஆச்சரியம்! இவள் சங்கரன்தானென்று அபிப்பிராயப் படுகிறுளே' என்று யோசித்துக்கொண்டு தோட்டத்துக்குள் நுழைந்தான்.

"சங்கரன் கொலே செய்தது வாஸ்தவமானுல், சிதம்பரம் ஏன் இவ்வளவு கெடுதி செய்யவேண்டும்? ஒருவேளே பாலாம்பாள் இதற்கு உடந்தையாயிருந்திருக்கலாமா? சங்கரனேப் பிடித்தால் பாலாம்பாளேயும் பிடித்ததாகும். பாலாம்பாளேயே சிதம்பரம் வைத்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். ஆனுல் பாலாம்பாள்

ஒரு தடவை விசாரணையாய் விடுதலை அடைந்து விட்டவளல்லவா? அதே கேஸில் மறுபடி யவளைப் பிடிக்கமாட்டார்களே. என்ன சனியனோ வரவர மர்யமர் யிருக்கிறதே, ஒன்றும் தெரிய, ஒன்றும் விளங்க வில்லையே! ஜானகியம்மாள், சங்கரன், சிதம்பரம், தர்மராஜு எல்லார்மேலும் குற்றமிருக்கிறது. ஒருவர் மேலு மில்லைபோலுமிருக்கிறது." என்று கைலாஸம் சிந்தித்துக்கொண்டே தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு வருகையில் கிறுக்கு முத்தன் எதிர்ப்பட்டான்.

முத்தனுக்குச் சுமார் 48, 50 வயதிருக்கும். கைலாஸம் ஒரு அணுக் காசை அவனிடம் எறியவே, அவன் அதை எடுத்துக் கொண்டு, கும்பிடு போட்டு விட்டு, தோட்டத்தில் ஒரு மரங்கூட பாக்கியில்லாமல் ஆதியோடந்தமாய் ஒவ்வொரு மரத்தின் திறத்தையும் சொல்ல ஆரம்பித்தான். தான் கீழ்ப்பாக்கம் கிறுக்கு ஆஸ்பத்திரியிலிருந்ததையும், பிறகு சோமு யஜமானன் தன்னைக் காப்பாற்றியதையும், தோட்ட விஷயமாய்த் தன்னைப்போல் பாடுபடக்கூடியவன் உலகத்திலேயே இல்லை என்பதையும், சேலம் ஒட்டு மாம்பழத்தைக் கொடுத்து கலெக்டர் எஜமான்கள்முதல் சப்மாஜிஸ்டிரேட் எஜமான்கள்வரை, எல்லோர் தயவும் சம்பாதித்து, ஒவ்வொருவரிடமும் சம்மானம் வாங்கினதையும், எல்லா வைபவங்களையும் கதை கதையாய்ச் சொன்னான். "சாமி! பழைய எசமாங்க இருந்தா இப்போது எப்படியிருக்கும் இந்தத் தோப்பு! புது எஜமானும் நல்லவுகதான்" என்று முடித்தான்.

கைலா:—(திடுக்கிட்டு) "அதுயார் புது எசமான்?"

முத்தன்:—"மருதை வக்கீல் சிதம்பர எசமான்"

கைலாஸம், "சோமு பேரிலிருந்த இந்தத் தோட்டத்தைச் சிதம்பரம் எப்படியடைந்தார்?" என்று சந்தேகமும் ஆச்சரியமும் அடைந்தான். இதற்குள் இருவரும் வைகை ஓரம் வந்து சேர்ந்தார்கள்.

கைலா:—"என்ன முத்தா! எவ்வளவு சுகமாயிருக்கிறது பார்த்தாயா? உன்பாடு சௌக்கியமடா. வெளியே போனால் களவும் கொலையும்!—"

'கொலை' என்ற சொல் கிறுக்கு முத்தன் காதிற்படவே, தான் பார்த்த கொலை சமாசாரமெல்லாம் அவன் ஞாபகத்துக்கு வந்து விட்டது. கைலாஸம் பின்னும் இரண்டணாவை எடுத்து அவன் கண்ணில் காட்டவே, கடிகார யந்திரத்திற்குச் சாவிகொடுத்தாற்

போல, தன் மூளையிலிருந்ததை எல்லாம் 'மட்மட' வென்று சொல்ல வாரம்பித்து "கொலைக்கதை சொன்னல் எஜமாங்களுக்குப் பிரியந் தானே?" என்று கூறிக் குலுங்கச் சிரித்தான்.

கைலா:—"சிச்சீ என்ன கதை? நல்லாயிராதே"

முத்தன்:—"எசமாங்க, இப்படிச் சொல்றீங்களே; நல்ல கதை; நான் கண்ணுலே கண்டது இங்கறேன்"

கைலா:—(கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு) "சரி அவசரம். சீக்கிரம் சொல்லமுடியுமானுல் சொல்லு"

முத்தன்:—(சொடக்குப்போட்டு) "இந்த மினிட்டிலேநான் இந்தக் கதையைச் சொன்னுல், ஒருபயல் தூக்குக்குப் போயிடுவான்."

கைலா:—(இன்னும் அரைக்கால் ரூபாயைக் காட்டி) "எங்கே, சொல் பார்ப்போம், சீக்கிரம்"

முத்தன்:—(அந்த 2 அணுவைத் திருப்பித் திருப்பி அழகுபார்த்து வேஷ்டியில் முடிவதும் அவிழ்ப்பதுமாய்), "சாமி! 20 வருஷத்துக்கு முன்னே சோமு எசமாங்ககிட்டே வேலைக்கு வந்தேன். நான் கிறுக்காம் சாமி! கேட்டீங்களா பளிபாவத்தை? சோமு எசமாங்க என்னைக் கிறுக்குச் செயிலிருந்து கூட்டியாந்து வேலைக்கு வச்சுக் கிண்டாங்க. தோட்டம் எவ்வளவு நல்லாயிருக்குப் பாத்திங்களா?'

கைலா:—"பேஷ்! சொல் சீக்கிரம்"

முத்தன்:—"அது, சேலம் ஒட்டுமாங்கண்டு——"

கைலா:—"அது கிடக்கட்டும்; அந்தக் கொலை—"

முத்தன்:—"ஒருநாள் இராத்திரி நிசிப்பொளுது இருக்கும். படுத்துக்கிட்டு இருந்து—"

கைலா:—"இந்தத் தோட்டத்தில் படுத்திருந்தாயா?"

முத்தன்:—"ஆமாங்கசாமி! எசமாங்க நாக்குட்டி, நான் தான். என்னமா சாமி, உங்களுக்கு நான் சொல்லுமுன்னே தெரிஞ் சிறிச்சு!"

கைலா:—"சரி. மேலே சொல்லு"

முத்தன்:—' அன்னிக்குப்பாருங்க, மை இருட்டு. அந்திப்பொளுதுக்குக் கொஞ்சம் ஒரு போகணி கள்ளுக்குடிச்சிட்டு—தர்மாராஜ—எசமாங்க—கொடுத்தாங்க துட்டு, சருருக்கு இண்டு. அந்த இருட்டைக் கண்டா பயஞ்சாமி! நாக்குட்டிக்கு—"

கைலா:—"சரி. அப்புறம் என்ன நடந்தது?"

முத்தன்:—"நிசிவேளே: எனக்கு நாளி நச்சத்திரம் தெரியாது. சாமி!—என்னைப் படிக்கவைக்கல்லே எங்கப்பச்சி. எளுந்தோண்ணே பாத்துக் கிட்டேன்."

கைலா:—"கொலையையா?"

முத்தன்:-"அதை இல்லே. ஒருத்தன் கிளே செத்துக்கிடந்தான். இன்னொருத்தன் அவனைத் தூக்கினுன். சங்கரன் 'லாந்தர்' பிடிச்சுக் கிட்டு நிண்டான்.—ஹ்ம்! தெரிஞ்சிச்சா? நாக்குட்டி கண்டு—"

கைலா—"செத்தவனைத் தூக்கினவன் யார்?"

முத்தன்:—"தர்மராஜா எசமாங்க செத்தவனைத் தூக்கியா ந்து இந்த இடத்திலேதான் ஆத்திலே கடத்திட்டாங்க. அப்போ தான், 'செத்தது சோமு எசமாங்க' இண்டு எசமாங்க நாக்குட்டிக் குத் தெரிஞ்சிச்சு—"

கைலா:—"சங்கரனும் தர்மராஜாவும்?"

முத்தன்: —"ஆமாஞ்சாமி! ஆமா. என்னவோ 'கசு, புசு' 'கசு, புசு' இண்டு பேசிக்கொண்டிருந்தாங்க. நான் கண்ணை மூடிக்கிட்டுப் பாத்துக்கிட்டிருந்தேன்."

கைலா:—"இதை ஏன் நீ ஒருவரிடமும் சொல்லவில்லை?"

முத்தன்:—"சாமி! மறுபடி என்னைக் கிறுக்குச் செயிலிலே வச்சா, சோமு எசமாங்ககூட செத்துப்போயிட்டாங்க. யாரு என்னை மறுகக் கூட்டிக்கிட்டு வருவாங்க?"

கைலா:—"யார் கொலை செய்திருப்பான்? சங்கரனு? தர்ம ராஜாவா?"

முத்தன்:—"சாமி! அவங்க நல்லவங்கசாமி. இந்த முத்தனைக் கண்டிட்டா—அவங்களுக்கு என்ன சந்தோசம்? அண்ணைக்கி முதல், நாள் ஒண்ணுக்கு அரைக்கால் ரூபாப் கொடுத்தாங்க. இன்னெண்ணு: சானகியம்மாபேரிலே அவங்களுக்கு மெத்தப்பிரியம். அப்படிக்கிருந்த அம்மா புருஷனையே அவங்க கொல்லுவாங்களா சாமி?"

கைலாசம், 'இந்தக் கிறுக்கனுடைய வார்த்தைகளையும் சொந்த அனுமானங்களையும், அபிப்பிராயங்களையும் கேட்டுச் சிரித்துவிட்டு, 'இனி யிவனிடம் ஒன்றுமறிய முடியாது' என்று நினைத்துக் காசை அவனிடம் எறிந்துவிட்டு, மங்களபுரம் நோக்கிச் சென்றான்.

"முத்தன் கிறுக்கன் ஆனாலும், அவனிடமிருந்து முக்கியமான சில விஷயங்களறிந்துவிட்டோம்: சம்பு, தர்மராஜூதான். சங்கரன் அவனிடம் வேலையிலிருப்பதற்குச் சரியான காரணம் தெரிந்துவிட்டது. எஜமானனானாலும் தன் தங்கையைக் கெடுத்த கோபத்தால் அவன் சோமுவைக் கொன்றிருக்கலாம். பிறகு, தர்மராஜூவும் தானுமாக ஆற்றில் பிணத்தை எறிந்திருக்கலாம். அப்பொழுதிருந்த நிலைமையில், இயற்கையாய்த் தர்மராஜூமேல்தான் ஸம்சயம் ஏற்படக்கூடியதாயிருந்தது. ஆகையால், தர்மராஜூதான் கொலை செய்தான் என்று சங்கரன் பிரமாணஞ்செய்தால் எல்லோரும் நம்பி விடுவார்கள். ஆகையால், சங்கரன் தயவு, தர்மராஜூவுக்கு வேண்டியிருந்தது. தர்மராஜூ வெளிப்பட்டால் கொலையை மறைத்த குற்றமாவது, சங்கரனைப் பிடிக்கும். அதனால் தர்மராஜூவும், சங்கரனுக்கு வேண்டியிருந்தது. இந்த நிலைமையில் தர்மராஜூவும், சங்கரனும் பரஸ்பரம் பயமுடையவர்களாய்ப் பெயர் மாறாட்டத்துடன் மங்களபுரம் மடத்தில் வசித்து வருகிறார்கள். இது தவிர, சோமுவுக்குச் சொந்தமான 'பத்மவிலாஸம்' பங்களாவும் அதைச்சேர்ந்த தோட்டமும், சிதம்பரத்துக்கு வந்த விவரமெப்படி?—எல்லாம் மாயமாகத்தான் இருக்கிறது" என்று பல எண்ணலானான்.

R. S. நாராயணசாமி ஐயர் B.A., B.L.

தைமீ விடுகதை வினவுக்கு விடைகள்

பணமலி சேடன் சுமக்கும் உலகிற் பரவி எங்கும்
மணமலிந் தார்நச்சி னார்க்கினியப்பெயர் வாய்ந்தொளிர்வோய்!
கணபதி சுப்ர மணியையன் வேண்டிக் கருதியது
'மணிமே கலை'யென மற்றவன் பால்நீ வழுத்துவையே.

J. S. இராம ராவ், B.A. சென்னை.

ஆனை முகமும் அறுமுகமும் கொண்டவர் பேர்த்
தேனை நிகர் சொல்வலற்குச் செப்புவாய்—தானே
அணிமே கலையா அருந்தமிழே பூணும்
'மணிமே கலை'யென்ன மன்

அ. நடராஜன்
VI. பாரம், போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்.

யாரும் செய்யும் வேலை.

"சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பைப் பசியின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்."

யாரும்செய் யும்வேலை பெண்ணே! எண்ணில்
யாண்டும்இவ் வயிற்றீற்கும் துணிக்குமே கண்ணே! (யாரும்)

காலை முதற்கொண்டு சுற்றி வாடிக்
கைநோவ நோவவே நெல்லினைக் குற்றி
வேலைதே வையென்று நாடி மாலை
வேளையிற் சென்றேழுங் கிற் சுமந் தோடி (யாரும்)

நான்கான வேதங்கள் தேடி நல்ல
நயமுள்ள சாஸ்த்ரபு ராணங்கள் பாடி
வான்மழை பொழியுமென் றோதி சுபம்
வாய்த்திடு பஞ்சாங்கம் பார்த்திடும் நீதி (யாரும்)

அடித்தடித் திரும்பினைக் கூட்டி அத்தால்
அழகுள்ள பலவகை ஆயுதம் காட்டி
வெடிமருந் தாதிய பண்ணி நீங்கள்
விரும்பிக்கொண் டிடுமென எவரையும் நண்ணி (யாரும்)

முன்னணி தனிலாட்கள் நிற்க அதன்
பின்னணி தனிலாட்கள் விசித்தூல் கற்க
தந்நிக ரில்பெருங் கத்தி கொண்டு
தகைமையைக் காட்டிப் பகைவரைக் குத்தி (யாரும்)

பரிமீதில் பெருமையா எறி கையில்
பட்டயம் கொள்வீரர் தாமெனக் கூறி
ஒருவரை யொருவர் அடித்து வீணில்
ஒன்றுக்கு முதவாதே உயிரை மடித்து (யாரும்)

துஷ்டத்த னமுள்ள யானை முதல்
துர்ப்பல ஜந்துவெ னப்படும் பூனை
கஷ்டமாம் களிமண்ணின் பாண்டம் வரை
கடுகியே நம்மிடம் விற்பவர் யாண்டும் (யாரும்)

வஞ்சகம் நெஞ்சினிற் கொண்டு யாரும்
வன்கண் கொலைகள் வாற்றிய உண்டு
மிஞ்சும் ஜனத்திற்சிக் குண்டு யாரும்
மிதித்து வருத்தவே மானங்கெட் டுண்டு (யாரும்)
சன்யாசி ஆண்டிநாம் என்றும் மற்றும்
சனங்கள் வணங்கும்பை ராகியேம் என்றும்
மன்னும்வே டங்களை யொன்றி வந்து
வயிற்றிக்கில் லாமல்என் சாண்களும் குன்றி (யாரும்)
ஆகாயக் கப்பலும் காட்டி மோட்டார்
அழகுள்ள நீராவிக் கப்பல்கள் ஓட்டி
மோகத்தால் வியாபாரப் போட்டி போட்டு
மோசங்கள் செய்தே யுலகினை ஆட்டி (யாரும்)
அரசராய் உலகினை யாண்டோர், மற்றும்
ஆண்டிக ளாகியே யோகத்தைப் பூண்டோர்,
ஒருமையாய் பெருமைபெற் றிடவோ அன்றி
உலகத் தொழில்எதை யேனும்உற் றிடவோ (யாரும்)
தகமைக் குணங்கள்கை யாண்டு உள்ள
தவற்றைத்தவிர்த்துநல்லொழுக்கமும் பூண்டு
பகவனைத் தியானித்துப் போற்றி என்றும்
பயபக்தி யுடன் நாளும் மலர்களைத் தூற்றி. (யாரும்)

(தமிழ்ப் பண்டிதர்: சே. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்.

சிறு நீதிக் கதைகள்.

1. கரடியும் தேனியும்.

கேடுவான் கேடுநினைப்பான்.

கரடி ஒன்று, ஒரு தோட்ட வேலியைத் தாண்டி உட்சென்று அங்கு மொய்த்திருந்த தேனீக்களைத் துரத்தித் தேனைப் பருகத் தொடங்கிற்று. உடனே தேனீக்கள் கரடிக்குத் தீங்கு செய்ய விரும்பிக் கோபத்துடன் கொட்டின. ஆயினும், அதன்தோல் அழுத்தமாகவும், உரோமங்கள் அடர்த்தியாகவும் சூழ்ந்து இருந்த தால், அதற்குத் துன்பம் சிறிதும் உண்டாகவில்லை. இதுகண்ட தேனீக்கள், கரடியின் மூக்கிலும், செவியிலும் படுகொட்டுக்கொட்

டின. அத்துன்பம் பொறுத காடி, தன்நகங்களால் தன் காது மூக்கு களைப் பிராண்டிக்கொண்டு துன்புற்று உறுமித் தவித்தது.

நீதி:—ஒருவன் தனக்குப்பின் விளையும் கேட்டை நினையாமல் பிறர் பொருளை அபகரிக்கப்புகுந்தால், கேடே அடைவான்.

2. வேடனும் பறவையும்.

"பொல்லார் வஞ்சம் புரிந்திழிவர் தாம் நலிந்தும்
நல்லார் புரிவர் நலம்." — அரும்பொருட்டிரட்டு

வேடன் ஒருவன், பறவைகளைப் பிடிக்கக் கண்ணி வைத்துக் கொண்டிருந்தான். தூரத்திலிருந்த ஒரு குருவி, "ஐயா! நீர் என்ன செய்கிறீர்?" என்று கேட்டது. அதற்குவேடன், "ஆகாயத்திற்சென்று வீணாகக் கஷ்டப்படுகிற பிராணிகளின் உதவிக்காகவே இவ் வலையை வீசுகின்றேன். இங்கே வந்து வசிக்கும் பறவைகளுக்கு உணவைப் பற்றிய கவலையே சிறிதும் வேண்டாம். இங்கே தின்பண்டங்கள் மிகுதியும் இருக்கின்றன" என்றான். அப் பேதைப்பறவை அவன் கூறியதெல்லாம் உண்மையென்றே எண்ணிற்று. வேடன் வலை கட்டிச் சென்றதும், அது அதில் இறங்கிச் சிக்குண்டு வருந்திற்று. அஃதறியாத சில கிளிகள் அவ்வலையருகே வந்து தாமும் அத் தின் பண்டத்தை யெடுக்க முயன்றன. குருவி அது கண்டு, "கிளிகளே! ஜாக்கிரதை! வேடன் இங்கு வலைவீசி யிருக்கிறான். அவன் செய்த சூதால் நான் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். நீங்களும் மோசம் போகாதீர்கள். இவ்விஷயத்தைநீங்கள் நம் எல்லாச் சகோதரப்பறவைகளுக்கும் தெரியப்படுத்துங்கள்" என்றுகூறிற்று. வந்த பறவைகள் 'செத்தோம் பிழைத்தோம்' என்று பறந்தோடிவிட்டன. சிறிது நேரத்திற்கெல்லாம் வேடன் அங்குவந்து பார்த்தான். அப்பொழுது வலையில் வேறு பறவைகள் எதுவும் அகப்படாததைக் கண்டு அவன்வருந்தி, வலையிலுள்ள குருவியைப் பார்த்து, "ஆ! ஆ!! இதை நான் ஏமாற்ற, இது, இவ்விடத்தில் இனி ஒரு பறவையும்வரா வண்ணம் செய்துவிட்டதே!" என்று பரிதாபித்துக்கூறிச்சென்றான்.

நீதி:—தம் வஞ்சகம் வெளிப்படாதிருக்கும்வரைதான் வஞ்சகர் பிறரை ஏமாற்றமுடியும். வெளிப்பட்டுவிட்டாலோ, அவர்களே ஏமாறவேண்டிவரும். அறியாமையால் துன்பத்திற்காளாகியோரை, அதே கஷ்டத்திற்குள்ளாகிய நல்லோர், காக்க முற்படுவர்.

பண்டித: M. M. நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

தமிழர் சமய நிலை.

(37-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வண்ணம் ஆரிய மக்கள் சகவாசத்தினாலும் கலப்பினாலும், வைதிக கர்மங்கள், தானங்கள் முதலிய கொள்கைகளாதியன பரவலாயின. ஆரியர்க்குள்ளே மிகவும் முக்கியமாகக் கருதப்பட்ட மக்கட்பேறும், "அருண்மகப் பெறுகிலாருக் கணைகதி நாஸ்தி' யென்னும் நம்பிக்கையும், இவர்க்குள்ளே பரவின. பாண்டியன் அறிவுடை நம்பி, இதனை

"——மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளே !" (புறம் 188)

'ஜாய மானோ ஹ வை ப்ராம்ஹணஸ் திஸ்ருபிர் ருணைர் ருணவான் ஜாயதே ப்ரம்ஹசர்யேண ரிஷிப்யோ யஞ்ஞேன தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய: ஏஷ வா அந்ருணீய: புத்ரீ யஜ்வா ப்ரம்ஹசாரீ ச' (VI 3. X 5)

என்ற தைத்திரிய சம்ஹிதையின் கோட்பாடு, கபிலரது பதிற்றுப் பத்து (70)ப் பாட்டினுள்

"வேள்வியிற் கடவு ளருத்தினை, கேள்வி
யுயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை,
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
யிறந் துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல் !"

என்று வெளிவந்தது. இம் மக்கட்பேறு முக்கியமாகக் கருதினமை யானன்றோ, மக்களைப்பெற்று அம்மக்கள் கரத்தாலே பலிபிண்டம் முதலாயின கொண்டிடப்படும் சிராத்தாதிகள் முக்கியமாகக கருதப்பட்டமையானன்றோ, போர் தொடங்குமுன்னர், மகவு பெற்றிடா மாதர் யாவரையும் அரண் புகுமாறு எச்சரிக்கை செய்தல் மேற்கொண்டனர் தமிழ் மன்னர் ! (புறம். 90)

தானங்கள் ஒரு சில இவ்வாரியரால் தோற்றப்பட்டன.

"ஆடகப் பெருநிறை ஐயைந் திரட்டி.
தோடார் போந்தை வேலோன் றன்னிறை
மாடல மறையோன் கொள்கென் றளித்த" (சிலப், XXVII. 174)

துலாபாரதானமும் "தையி னீராடிய தவந்தலைப் படுவாயோ?" (கலித். 59) தைநீராடல் முதலியனவும், இவர் அனுஷ்டானங்கள்.

இவர்க்குள்ளே விவாகச் சடங்குகள் முதன்முதலாக ஆரியரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதுமுன்னர்க் கூறப்பட்டது. அக்கினி

சாக்ஷியாக, பாணிக்ரகணம், அக்கினிப்ரதக்ஷிணம், துருவதர்சனம் முதலியன கிருஹ்யநூல்களிற்சாற்றியவண்ணமே நடந்தனஎனவும்,

“ நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட
தீவலஞ் செய்து காண்பார்கள் நோன்பென்னை !”
(சிலப். I. 49 B.)

என்பனவாதிய அடிகளால் நாம் அறிகிறோம். நிற்க.

இவற்றை விடுத்து, இவர் சமய சமூகக் கொள்கைகளைச் சிறிது கவனிப்போம். அப்பொழுது தமிழ்நாட்டில் இந்துதர்மமே சைவ வைணவ இருவகைக் கொள்கையும் பிளவுபடாது, ஒன்றி யிருந்த சநாதனதர்மமே திகழ்ந்திருந்தது. பௌத்தமதம், மணி மேகலை, சிலப்பதிகாரமாதிய காப்பியங்களில் விதந்தோதப்படும். சமண மதமபின்வந்ததேயாகும். இப்பஞ்சகாவியத்தின் மூலமாகத் தமிழ்மக்களைக் கைப்பற்ற முயன்று அம் முயற்சி காரணமாகத் தோன்றியவை இவை என்று கொள்ளவும், சமணர் மதம் அப் பொழுதுதான் சிறுகச் சிறுக தமிழ்நாட்டில் நிலைக்கலுற்றது எனக் கருதவும் இடமிருக்கிறது. இப் பஞ்சகாவியங்களின் காலத்திலே மும்முரமாகத் தமிழரைச் சமணராக்கும் சமயக்கிளர்ச்சி நடந்து வந்ததாகும். சுமார் நூறு ஜனங்களுக்குள் பதினைந்து ஜனங்கள் சமணராகவிருக்கலாம் என மதிக்கக் கூடியதாக இருக்கிறது. நிற்க.

இவர் தொழுத தெய்வங்களுள், விடையூர் பரமசிவனும், திருமாலும, செவ்வேளும் பலதேவரும் முக்கியமானவர்களாவர்.

“ நுதல்விழி நாட்டத் திறையோன் கோவிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும் ”

என இவர் ஆலயங்களைக் குறிப்பிடுகின்றனர் இளங்கோவடிகள் (சிலப். XIV. 7-10). சமணர் வணங்கிடு இந்திரன் கோட்டமும், மணிப்பீடிகைகளும் அறவோர் பள்ளிகளும் பல பல நாட்டைத் திகழ்ந்தன. பலபலத் தலங்களை இளங்கோவடிகள் கோசிகமணி யின் கூற்றாகப் புகலிடுகின்றனர். வேங்கடத்தே செங்கண் நெடி யோன் நின்றவண்ணமும்,

"கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅய்
அலங்கற் செல்வன்" (பதிற். 31)

திருவனந்தபுரத்துப் பனித்துறை மண்ணிக் கிடந்த திருமாலின் செயலும் அவரறிந்திருந்தனர். மற்றைய பவகாரணி இட்டசித்தி முதலிய தீர்த்தங்களின் பெருமையையும், பிலங்களின் மான்மியத்தையும் இவர் ஓர்ந்திருந்தார்.

"பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவு"ளும் (மலைபடு. 82.)

கட்டின்மேலிருந்து பலிகொள்ளும் அயிரையும் (பதிற்று 79) பிற சிறு தேவதைகளும் இவர் வழிப்பட்டனர். இவர்க்கு விழாக்கள் கொண்டனர். இவ்விழா வாடம்பரங்களை நன்கு வருணிக்கிறது மணிமேகலை முதற் காதையாம் விழாவறைகாதை அதில்வரும் இந்திரன் விழாவும், கலித் தொகை 93-ம் பாட்டில்வரும், "ஆலமர் செல்வன் அணிசான் மகன் விழா"வும் நாமறிந்த ஒரு சிலவாம். மணல் முன்றிலில் சினைச்சுறவின் கோடுநட்டு உலவுநாட்களில் பரதவர் ஒரு விழா நடத்தினர். "கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப்" பொய்கை யார் (களவழி 17) நமக்கறிவிக்கிறார்.

"நறுவீ யைம்பால் மகளிராடுந்
தைஇத் தண் கயத்தை" (ஐங்குறு 84.)

என ஓரம்போகியாரும், "தையினீராடிய தவந்தலைப் படுவாயோ?" என அந்நாள் விரதானுஷ்டானத்தைக் கலித்தொகையுடையாரும் (கலித். 59) குறிப்பிடுகின்றனர்.

இவ்வளவு சொல்லியும், அவர் சமயக்கொள்கை மிகப் பரந்த பொதுநோக்குடையதாக இருந்தது கவனித்தற்குரியது. ஒரே குடும்பத்துள்ளும் ஒருவன் சைவனாகவும் மற்றையோர் சமணராகவும் இருப்பது சகஜமாக இருந்ததுபோலும்: செங்குட்டுவன் கற்கோடற்குக் கிளம்புகாலையில், சேடக்குடும்பி திருமால் பிரசாதம் கொண்டு கொடுப்பதாகவும், அதனை உரிய வணக்கத்துடன் அவன் ஏற்றதாகவும் அவர் தம்பியார் இளங்கோவடிகள் கூறுகின்றனர். நாமதிகம் கூறுவானேன்? பகவனடி பணியும் பரம பாகவதர்க்குத் துவேஷ புத்தி கூடாதெனவே இவர் கொண்டனர். ஆகலினன்றோ கடுவனிளவெயினனார் தமது பாவினுள்,

"பகைவ ரிவரிவர் நட்டோ ரென்னும்
வகையு முண்டோநின் மரபறி வோர்க்கே!" (பரிபா. 3. 57–58)

எனத் தமது திருமால் வணக்கத்துச் செருக்குடன் கூறினர்!

ரா. வாசுதேவ சர்மா, M. A., B. L.,
Lecturer in Sanskirt, The National College, Trichinopoly.

பராந்தகன்.

இரண்டாம் பாகம்.

முதற்காட்சி.

காலம்:—முன்னிரவு.

இடம்:—அரமனையைச் சார்ந்த பரிசளிப்பு மண்டபம்.

பாத்திரங்கள்: - பரிசுக்காகக் காத்திருப்போரும் பிரபுக்களும்.

[நகர் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. முற்பகலில் மங்கையர்க்கரசிக்கு ஆயுஷ்ஹோமமும், நண்பகலில் நகரவாசிகளுக்குச் சம்பிரமவிருந்தும், பிற்பகலில் பல்வேறுவிதங்களில் பிறப்புநாட் கொண்டாட்டமும் நடைபெறுகின்றன. இரவில் உக்ரபாண்டியனும், மங்கையர்க்கரசியும், மன்னனுடைய பரிவாரங்களிற் சிலரும், மெய்காப்பாளரும், தேவதார்ச்சனையின்பொருட்டு அங்கயற்கண்ணியின் ஆலயம்சென்று இருக்கிறார்கள். மந்திரிமாராதியோர் ஒருபக்கமும், வேதப்பிராமணரும் வேள்வியந்தணரும் ஒருபக்கமும், பிற நகரவாசிகள் ஒருபக்கமும், தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற இடங்களில் உட்கார்ந்துகொண்டும், மன்னனும் மகளும் ஆலயத்திலிருந்து திரும்பி வந்ததும் தங்களுக்குள் கிடைக்கக்கூடிய சம்மானங்களையும் பொருள்களையும் நினைத்து மனக்கோட்டை கட்டிக்கொண்டும், அன்றைய வைபோக விமர்சைகளையும் நானு விஷயங்களையும்பற்றித் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பேசிக்கொண்டும் இருக்கிறார்கள்]

கருணாகரன்:—குணசீலரே! மகாராஜாவை இன்று கவனித்தீரா?

குண:—ஏன்? நன்றாய்க் கவனித்தேன்.

கருண—அப்படியானல் அவரிடத்தில் என்றைக்கும் காணாத விசேஷம் இன்றைக்கு என்ன புதிதாய்க் கண்டீர்? சொல்லும் பார்ப்போம்.

குண—என்னவா? நேற்றுவரைக்கும் பாதககாதகனுடைய பயங்கரச் செயல்களை நினைத்துநினைத்துச், சொப்பனத்திலும் அஞ்சிப், படாத அவஸ்தையெல்லாம் பட்டுக்கொண்டிருந்த நம் கிழமன்னருக்குத், திடீரென்று பால்யம் திரும்பி இருக்கிறது. இன்று காலை மங்கையர்க்கரசியின் ஆயுஷோமம்தொடங்கியது முதல், அவரைக் கவனித்தவர்களுக்கு இது சொல்லாமலே தெரியும். ஆஹா! என்ன குதூகுலம்! ஆனந்த வெள்ளம் பொங்கித்ததும்பி வழிந்தன்றோ ஓடுகின்றது அவர் முகத்தில்! இதைத் தானே நீர் குறித்தது?

கருணா—ஆம்! அதுவே. உள்ளது உள்ளபடியே கண்டுரைத்தீர் நீர்.

சாமுகனபாட்டிகள்—மந்திரி கருணாகரர் சொன்னது ரொம்பசரி. மகாராஜாவுக்கு மங்கையர்க்கரசியிடம் என்ன அன்பு! என்ன அன்பு! நானும் எத்தனையோ பிரகிருதிகளைப் பாத்திருக்கேன். இந்த அபார வாஞ்சை இந்தப் பிருதிவியிலே—இந்த ஜம்புத்வீபத்திலே நான் பாத்ததே இல்லே.

ராமு தீக்ஷிதர்—நீர் பாத்ததில்லே எங்கிறீர். நெஜமாச் சொல்ரேன்: நான் கேள்விப்பட்டதுகூட இல்லெ.

முத்துசிரேளதிகள்—அப்படிச் சொல்லப்படாது. காண்ரது ரொம்ப துர்லபமின்னு வேணுமின்னுச் சொல்லும். "இல்லவே இல்லே" இன்னு, அது விருதா உபசாரச் சொல்லாத்தான்போகும்.

ரா. தீ.—நான் சொல்ரதெ நீர் நன்னாத் தெரிஞ்சுக்கில்லே. கொலகாரப் புலிக்குக்கூட தன் குட்டிகளிடத்திலே பிரியந்தான். அதைப்பத்தி நான் சொல்லல்லே. சொந்தப்புள்ளெகளைப் பத்தியே நான் சொல்லல்லே. இந்தப் பொண்ணு, வளர்ப்புப் பொண்ணு இங்கிரது ஓமக்குத் தெரிஞ்சிருக்கட்டும். அவ மகாராஜாவினுடைய தம்பி பொண்ணுக்கும். பெத்தவாளுக்குக்கூட இவ்வளவு வாஞ்சை இருக்குமா? நீரே சொல்லும்.

முத்து—அப்படிக் கேளும். அதுக்கும் பதில் சொல்ரேன். சொன்னத் துக்கப்பறம் 'ஆமா' 'ஆமா' இம்பீர் பாரும்.

ரா. தீ.—நல்லவேளையா நம்ம பெரியவா தேடிவச்ச ஆஸ்தி அழியா ஆஸ்தி. அது எது? கிரந்தபொக்கிஷங்கள். நன்னு போஜியும். கவனிச்சுக் கேளும். ராமாயணம் மகாபாரதம் தெரியல்லே இன்னு நாலுபேர் சிரிப்பா; நாம பிராமணு இல்லே இம்பா. ஸாக்ஷாத் ராமமூர்த்தி, தசரத ராஜாவினுடைய சொந்தப் புள்ளையா?—அவருக்குப் பொறந்தவரா? இல்லேயே. இருந்தாலும், அவரிடத்திலே தசரதருக்கு எவ்வளவு வாஞ்சை பாரும். ராமமூர்த்தியைக் காட்டுக்கு வெரட்டக் கைகேசி வரங்கேட்டபோது அவர்பட்ட அவஸ்தெ ஒம்ம ஞாபகத்துக்குவல்லியா? அவர் காட்டுக்குப் போயிட்டார் இங்கர சமாசாரம் காதுலே விழுந்ததோ இல்லியோ, தசரதர் பிராணனே போயிடல்லியா? சொல்லும். என்ன காணும் வாயெ மூடிக்கிண்டிருக்கிரே? இருக்கட்டும்.—சொச்சமும் கேளும்: கிழத்தசரதராவது தம் பொண்டாட்டி வயத்திலே பிறந்த புள்ளெயெயாவது நெனச்சுப்

பிராணனைவிட்டார். குண்டுக்கல்லுபோல இருந்த துரோணாசாரியாருக்குக் காச்சலாகரப்பா? அவர் பிராணன் போச்சே படக்குனு. காரணம்என்ன? அசுவத்தாமா ஆரு? அவன் துரோணாசாரியாருக்குச் சொந்தப்பிள்ளையா ? அவா பொண்டாட்டி வயத்திலெயாவது தசரதருக்குப் பொறந்த புள்ளெயப்போலப் பொறந்தவனா? ரெண்டும் இல்லெ பாரும். கேவலம் ஒரு குதுரைக்குப் பொறந்த குழந்தெ. இது ஒமக்குத் தெரிஞ்சது தான். இந்தக் குதுரைக் குழந்தையிடத்திலே, துரோணசாரிக்கு இருந்த வாஞ்சை, —சத்தியமாச் சொல்லும்.—நாம சொந்தக் குழந்தையிடத்திலே வச்சிருப்போமா ? அந்தப் புள்ளெ செத்தான் இன்னு கேட்டவுடனே, அது நெஜமா பொய்யா இன்னுகூட விசாரிக்காமே மூர்ச்சைபோட்டு விழுந்து, மூர்க்கத்தனமா விரோதியினாலே மூர்த்தாவிலெ அடிபட்டுப் பிராணனைவிட்டது நமக்குள்ளே ஆருக்கையா தெரியாது? தருமபுத்திரன், அசுவத்தாமாவின் பிராணன் போச்சு இன்னு சொன்னவுடனே போச்சே அவர் பிராணனும். பெத்தவாளைவிட வளத்தவாளுக்குத்தான் வாஞ்சை அதிகம் இங்கிரதுக்கு இதெவிட வேறென்ன உதாரணம்வேணும் ? "தன் வயத்திலே பொறந்தாத்தான் வாஞ்சை; இல்லாமெப்போனா இல்லெ" இங்கிரது இல்லெ பாரும். நீர் நம்பினாலும் சரி. நம்பாட்டாலும் சரி. என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்ரேன்: எங்கஅப்பா அம்மாவைவிட, ஒரு புள்ளெகூடப் பொறுமல் என்னைச் சிறு வயஸு முதல் வளத்து வந்த எங்கபாட்டிக்குத்தான் என்பேரிலே ரொம்ப வாஞ்சை. ஆயிரம் ஏணி வச்சாலும் இந்த ரெண்டுபேருடைய வாஞ்சையும் சேர்ந்து எங்க பாட்டி வாஞ்சையை எட்டிக்கூடப் பார்க்கமுடியாது.

குப்பு சாஸ்திரி—ராமு தீக்ஷிதரே! சரியாச்சொன்னீர். ஆனா நேக்கொரு சின்ன ஸந்தேகம்: நீர் குறிச்சுச் சொன்ன ரெண்டு பேர்வழிகளும் புள்ளெக் கொழந்தெகள். நம்ப ராஜாவுக்கு அதிகாரம் கொடிகட்டித்தான் பறக்கறது. அவர் நாவசஞ்சா நாடசையும். இருந்தாலும் என்ன செய்யரது? அவருக்கு இருக்கரதெல்லாம் ஒரு பொண்ணு. அதுவும் வளர்ப்புப் பொண்ணு.—ஆனா ராமு தீக்ஷதர் அவ்வளவு சொன்னத்துக்கு அப்புறம், "வளர்ப்பு" இங்கர வார்த்தையை வாயெத்தொரந்து சொல்லப்படாது.' அது போகட்டும். இவ்வளவு நல்ல ராஜாவுக்கு பிது: சதகுணம் புத்ர:

இங்கர பிரகாரம், அவளைவிட நூறுமடங்கு புத்திசாலித்தனமும் தாராள சிந்தையும்கொண்டு, லோகத்துக்கு க்ஷேமமும் உண்டாக்கற ஆம்பளேப்புள்ளெ இல்லாதகொறை கொறைதான். அதுலெயும் புள்ளெயில்லாதவா "புத" இங்கர நரகத்துக்குப்போவாரும். என்ன செய்யரது ?—ஹ்ம் ! பாவம் !—இந்தப் பொண் வயத்திலேயாவது குஞ்சு கொழந்தைகள் ஆம்பளெகளாப் பொறக்கட்டும். அப்பொத்தான் இந்த ஒச்சம் கொஞ்சமாவது ஒழியும்.

மதிவாணன்—சாஸ்திரிகளே ! என்ன சொன்னீர்கள் ?: ஆண் பிள்ளைகள் பிறப்பது பெருமையென்றும், பெண் குழந்தைகள் பிறப்பது கேவலமென்றுமா ? "பிது: சதகுணம் புத்ர :' என்ற உமக்குப் "புத்ராது சதகுணம் புத்ரீ:" என்றது ஞாபகத்திற்கு வராமற்போனதென்ன ? பெண் ஜன்மம் பாபஜன்மமென்பதை எங்குக் கற்றுணர்ந்தீர் ? பெரியோர் சொல்லியது பொதுவிதி அவற்றிற்குப் புறனடை அல்லது விலக்கு விதிகளும் சில உண்டு. நம் பரதகண்டத்துப் பெருமை உமக்குத் தெரியாது போலிருக்கிறது. அவயவ வேற்றுமையன்றி, ஆண்களுக்காயினும் பெண்களுக்காயினும் அறிவு வேற்றுமையிருந்ததுண்டா? ஞான சம்பந்தரும்புகழ்ந்த மங்கையர்க்கரசியாரும், அசுவபதி ராஜனது அருந்தவத் தரிவையும், மலயத்துவஜனது மாதவச் செல்வியும், நீர் கூறும் ஆண்மக்களுக்கு எவ்விதத்தும் தாழ்ந்தவர்களா ? நம் காலத்திலேயும் அகல்யாபாய், லக்ஷ்மிபாய், விமலாதேவி, மதனலீலையார், ராணி மங்கம்மாள் இவர்கள்போன்றவர்களை அறிவுள்ளோர் மறக்கமுடியுமோ ?

ரா. தீ.—இங்கே உத்திரவானது ரொம்பசரி. ரொம்பசரி. பேஷ் ! பேஷ் !! ஒண்ணுந்தரம் ! ஒண்ணுந்தரம் !! இப்பொச் சொன்ன வாளெப் பத்தி எம்புள்ளெயாண்டான்கூடச் சொல்லியிருக்கான். சாஸ்திரிகள் அப்படி திடுதிப்பா சொல்லக்கூடாதுதான். ஆணு கட்டும் பொண்ணுகட்டும் அறிவில்லாதெபோனு அந்தக் குடும்பத்துக்கு அனர்த்தமும் ஒச்சமுந்தான். நான் சிறுசா இருக்கும் போது அடிக்குப் பயந்துக்கிண்டு அர்த்தம் தெரியாதெ நெட்டுர் பண்ணி ஒப்பிச்ச ஒருபாட்டிலே ரொம்ப நெஜமிருக்கின்னு வயஸானத்துக் கப்பறந்தான் நேக்குத் தெரிஞ்சுது. சாஸ்திரிகளுக்கும்கூட இது தெரிஞ்சிருக்கலாம்.

குப்பு—நேத்திக்குச் சாப்பிட்டதே இன்னிக்கு ஞாபகம் இல்லையே. அப்போப் படிச்சதெல்லாம் இப்போ எப்படி நெனவிருக்கும்?

என்ன பாட்டு அது? சொல்லுமே கேப்போம்.

ராமு—நாலாணுத்திக்கூட ஒப்பம வாயாலேயே அது வந்ததே: 'லக்ஷ்மணன் புள்ளெக்கிக்கூட ரொம்ப எத்தது' இன்னீரே, அது தான். ஞாபகத்துக்கு இன்னும் வல்லே போலிருக்கு:

" அச்சமுள் அடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்றே"

இங்கிறபாட்டுத்தான் அது. 'மக்கள்' இங்கிற வார்த்தை ஆண் பொண் இங்கிற ரெண்டையும் குறிக்கும். தெரிஞ்சுக்கும். "புத்திரன் இல்லாமெப்போனா 'புத்' இங்கிற நரகத்துக்கு போவா'. இன்னீரே. பன்னிக்குட்டிகளுக்கெல்லாம் அப்போ மோக்ஷம் தான். அப்படித்தானே? ஆமா காணும், எத்தனே புள்ளெகள் பாரும் அதுக்கு. 'சற்புத்திரன்' 'அறிவறிந்த பழி பிறங்காப் பண்புடை மக்கள்' 'மைதீர் மகப்பெறு மானிடர்' இன்னு சொல்லப் பட்டிருக்கிறதே ஒழிய வெறுமனே 'புத்திரன்' இன்னு சொல்லல்லேகாணும். இன்னும் பெரியவா சொன்னதிலே அறிவாலேயே மோக்ஷம் இன்னு அறிஞ்சுக்க வேண்டி இருக்கு: உத்தம சந்யாஸிக்கு ஏது காணும் புத்ரர்?

" புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது"

என்பது தெரிஞ்சால் இவ்வாறு சொல்லி யிருக்கமாட்டீர்.

சேவகன்—(விரைந்து வந்து மதிவாணனைக் கும்பிட்டு) மகா ராசாவும் குளந்தெ ராணியம்மாங்களும் வந்திட்டாங்க.

மதிவா—சரி. நல்லது போ.

[மதிவாணனும் பிற மந்திரிகளும் மன்னனைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்]

யாவரும்—ஜயவிஜயீபவ! ஜய! ராஜேந்திரா!

உக்ர—நீதிபாலர் இங்கிருக்கிறாரா?

கருணா—மகாராஜாவுடன் கோவிலுக்குப் புறப்பட்ட பிறகு அவர் இங்கு வந்ததாகத் தெரியவில்லையே.

உக்ர—சரி இருக்கட்டும்—சபையோர்களே! ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரரின் திருவருளாலும், பெரியோர்களுடைய பரிபூரண ஆசீர்வாதத்தாலும், உங்களுடைய பேரன்பினாலும், இன்றைய சகல விஷயங்களும் குறைவற முறைபெற நிறைவேறியன. (மங்கையர்க்கரசியை நோக்கி) குழந்தாய்! நம் குலதெய்வம்போல் வீற்றிருக்

கும் நம் குலகுருவை நமஸ்கரித்து அவருடைய ஆசீர்வாதத்தை முதலிற் பெற்றுக்கொள் அம்மா!

[மங்கையர்க்கரசி நமஸ்கரிக்க.]

தயாநந்தர்—'மாமன்மா மியர்கள் கணவணும், வருமண வாளன் வேண்டிக்
காமுறும் உயிராய், ஈன்ற காவலன் குலமும் நீசேர்
பூமனின் குலமும் ஒங்கப் புரியுநற் றேவாய்ப், பாரில்
தீமையொன் றணுகாதென் றுந் திருவெனத் திகழ்வை அம்மா'

உக்ர—குழந்தாய்! இனிச் சபையை நமஸ்கரித்து எல்லோருடைய ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொள். [நமஸ்கரிக்கிறள்.]

ஒரு கிழமறையோன்—அம்மா குழந்தே! நீ, தீர்க்காயுசா, குணசாலியான ஆம்படையானைத் தேடி வாக்கப்பட்டு, குஞ்சு குழந்தைகளே, அதிலேயும் ஆம்பளே சிங்கங்களா, எதேஷ்டமாப் பெத்துக்கிண்டு, தொங்கத்தொங்கத் தாலியைக் கட்டிக்கிண்டு, தொண்ணுத்தெட்டுபிராயம் அரோகதிடகாத்திரையாக, 'பச்சையோடே தங்கம் பதிஞ்சுவிட்டாப்போல ஏத்தமான ராகவர்க்கு ஏல்வை சீதே இன்னார்' இங்கும்படி வாழு கண்ணே! தீர்க்காயுஷ்மான் பவ:

உக்ர—சரி. மதிவாணரே! மேலே நடக்கவேண்டியது, எல்லோரும் சம்மானம்பெறவேண்டியதுதானே? யாரையாவது அதைக் குறைவில்லாமல் நடத்த ஏற்பாடு செய்து, நாமிருக்கும் இடம் சீக்கிரம் வந்து சேரும். ஒரு முக்கிய விஷயம் உளது.

மதிவா—உத்தரவு.

[மன்னனும் மங்கையர்க்கரசியும் கருணாகரனும் குணசேகரனும் அம்மண்டபத்திலுள்ள ஓர் அந்தரங்க அறையில் பிரவேசிக்கிறார்கள்]

மதிவா—சரி. இனி மங்களவாழ்த்து நடைபெறட்டும்.

வடமொழிவாணர் ஒருவர்—

ஸ்வஸ்திப் பிரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாயேண மார்க்கேண மஹீம் மஹேசா
கோப்ராமணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகா: சமஸ்தா: ஸுகினோ பவந்து.

தென்மொழிவாணர் ஒருவர்—

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்.
வீழ்க தண்புனல். வேந்தனும் ஒங்குக.
ஆழ்க தீயதெல் லாம். அரன் நாமமே
சூழ்க. வையக முந்துயர் தீர்கவே.

மதிவா—(பொக்கிஷத் தலைவனை நோக்கி) தனபதியாரே! ஆயுஷ்ஹோம அவிசை இன்றுநேராகவே பெற்றுக்கொள்ள நினைத்து, 'ஸாக்ஷாத் அக்கினி தேவர்களே வந்திருக்கின்றனர்' என்று எண்ணும்படியான அவ்வளவு திவ்ய தேஜஸுடன் வந்து, உரத்த தொனியில் மந்திர உச்சாடனம் செய்து குழந்தை ராணியை ஆசீர்வதித்தருளிய வைதிக கோஷ்டிகளுக்கு எதேஷ்டமான பூரி தக்ஷிணைகளை வாரிவிடும்.

"இமைக்கும் கண் இமையாதே, இரு செவியும் வேறெங்கும் இயங்கிடாதே" நம்மைச் சிந்தை மகிழச்செய்து, பட்டமரமும் தழைக்கப் பாடிய இப்பாடர்களுக்கு அவர்கள், மனம் குளிரப் பதக்கமும் பரிசும் அளித்து அனுப்பும்.

'காவியங் கண்ணுமூடா; கவிதழ் தாமுங் கோடா;
வாவியங் கமலமன்ன வதனமும் நாத்து மேறு;
தூவியந் தோகைநல்லார் சுவரின்மே லெழுதிவைத்த
ஓவியம் பாடிற்றென்னப் பாடினர் உருகயாரும்'

என்று இவ்விசைப் பெண்களை யாவரும் மகிழ்வது நீர் அறிவீரே. இவர்களுக்கு இவர்கள் மனம்விரும்பும் ஆடை ஆபரணங்களை அபிரிமிதமாய் அளித்து அனுப்பும். சகல வித்வான்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்ப பெருங்கொடை அளித்து மிக்க மரியாதையுடனும் பரிவாரங்களுடனும் மனை சேர்ப்பியும். அன்னமில்லாக் கன்னமும் நல்லாடையிலார்க்கு ஆடையும் அளித்து, காசினல்லறையையும் தூசினல்லறையையும்திறந்துவிட்டு, யாசகர்கள் கைகொண்டமட்டும் அள்ளிச்செல்ல அனுமதி அளியும். சிறையிலடைபட்டிருக்கும்பழங்குற்றவாளிகளைச்சிறைவீடுசெய்ய உத்தரவிடுமின். இங்குக் கூடியிருக்கும் வையங்காப்போர் முதல், ஐயம் புகுவோர் ஈறாக, அனைவரும், மகாராஜா அளிக்கும் இரா விருந்தையும் அருந்திச் செல்லவேண்டுமென்பது மகாராஜாவினுடைய விருப்பும் கட்டளையும் ஆம். மகாராஜா எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். ஆதலின் உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

[செல்லுகிறான். யாவரும் பரிசுபெற்றுத் தத்தம் மனைக்குத் திரும்பி விருந்து மண்டபம் மீண்டும் செல்கிறார்கள். மதியாணன் மன்னன் இருக்கும் அந்தரங்க அறைபோய்ச் சேருகிறான்]

(இன்னும் வரும்)

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

மதிப்புரை.

"விஷதாரி" அல்லது சர் மதனகோபாலரின் மர்மம்:— இத்தமிழ் துப்பறி நவீனக ஆசிரியர் புதுவை. ரா. சுந்தரம் அவர்கள். விலை. ரூ. 1—4—0. கிடைக்குமிடம் "சர்மா சகோதரர்கள்" 58, மலைக்கோட்டை வடக்கு வீதி, தெப்பக்குளம், திருச்சி.

இதனை "ஓர் தமிழ் மணக்கும் துப்பறி நாவல்" என இதன் ஆசிரியர் மெய்ப்பிக்கிறார். ஒவ்வோரிடத்திலும் தமிழ்மொழி தமிழ்நாடு இவற்றின்பாலும் சத்திய நெறியின்மாட்டும் ஆசிரியருக்கு உள்ள பக்தி காணக்கிடக்கிறது. சிறந்த இலக்கண—ஆனால்யாவரும் அறிந்தின்புறக்கூடிய எளிய தமிழ்—நடையிலே இதனை எழுதியிருக்கிறார்.

கதைப்போக்கும் மிக அழகாக அமைந்துள்ளது. 'சென்னை உயர்நீதிமன்றத்து நீதிபதியாகவும், பின்னர் அரசாங்கத்தாரது நிர்வாக சபை அங்கத்தினராகவும் இருந்து, சிறந்த தொண்டியற்றி, "சர்" எனும் சிறப்புப்பட்டமபெற்று, பொதுஜனங்களாலே மதித்தவர் என்று கருதப்பட்டும் பின்னும் பொதுமக்கள் அபிமானம் காரணமாக கற்சிலை எழுப்பப்பட்டவருமான சர் மதனகோபால நாயுடுகாரு கே. ஸி. ஐ. இ; ஸி. எஸ். ஐ. என்ற பெரியார் உயிருடனேயே இருந்து வருவதும், தமது சிறந்த அனுபவஞ் சார்ந்த அறிவுரைகளாலும், பயிற்சியாலும் தமது உறவினருட் சிலரைத் தமது மருமத்தையும் உண்மைப் பெயரையும் அறிவிக்காமலே அரசியற்றுறையிலே மேன்மையுறச் செய்துவந்தமையும், இக்கதையினாரம்பத்திலே நிகழும் கொலையைச் செய்தொளித்த குற்றவாளியைக் கண்டுபிடிக்க அவர் செய்த அரும்பிரயத்தினங்களும், அவர் திடீர் திடீர் என்று கூடுவிட்டுக்கூடுபாயும் யோக்கியர்போல் ஒவ்வொரு கணமும் போடும் மாறுவேடங்களும், முடிவிலே அக்கொலைஞனைப்பிடிப்பதும் முதலாகிய செய்திகள் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. கதானுசாரமாக ஆசிரியர் இதில் தற்போதைய அரசியல் சமூக நிலையாதியவும் நன்குவிளக்கிக்கொண்டேபோகிறார். இன்னும் பல அரிய விஷயங்களும் இதில் உள. —பத்திராதிபர்.

ரூ. 150 முதல் 500 வரை மாதம் சம்பாதிக்கலாம்

எந்த வேலை செய்வது? எவ்விதமாக சம்பாதிப்பது? என்பதாக இனி கவலைவேண்டாம்! ஒழிந்த நேரங்களில் வேலை செய்து நாள் 1-க்கு குறைந்தது ரூ. 3 முதல் 15 வரை சம்பாதிப்பதற்குத் தகுந்த அனுபவ கைத்தொழில் முறைகளையும், புதிது புதிதான யோசனைகளையும் மாதந்தோறும் போதித்துவரும் "தொழிலாசிரியன்" என்னும் மாதாந்தத் தமிழ் சஞ்சிகைக்கு இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்! இதன் வருட சந்தா ரு. 2—0—0 தான்.

மானேஜர்:—'தொழிலாசிரியன்' ஆபீஸ், சிவகெங்கை. S. I.